நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 26.04.2023.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் ஏப்ரல்–2023ம் மாத அவசர கூட்டம் வருகிற 28.04.2023 தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

( ஒம் ) . திருமதி.ம.நிர்மலாபபிதா
தலைவர்
ஆத்தூர் நகராட்சி.

<u>மன்ற பொருள்கள்</u>

1. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தினை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை சேவை மனப்பான்மையுடன் கீழ்கண்ட விபரப்படி செய்துதர சேலம், ஏ.வி.ஆர்.ஸ்வர்ண மஹால் நகை கடை நிறுவனத்தின் உரிமையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | மேற்கொள்ளப்படவுள்ள புதிய மற்றும் பராமரிப்பு பணிகள் விபரம் |
|---|---|
| 1 | பேருந்து நிலைய கட்டிடங்களின் சுவர்களுக்கு வண்ணம் பூசுதல் |
| 2 | பயணிகள் அமர போதிய அளவில் புதிய இருக்கைகள் அமைத்தல் |
| 3 | ஆண்/பெண் இருபாலருக்கும் உள்ள சிறுநீர் கழிப்பறை கட்டிடங்கள் பராமரித்தல் |
| 4 | பயணிகள் எளிதாக அறியும் வண்ணம் பேருந்துகள் வந்து செல்லும் கால அட்டவணை (Timing Board ) LED லைட் உடன் அமைத்தல் |
| 5 | பேருந்துகள் நிற்குமிடத்தில் வழித்தட பலகை (Route Board) அமைத்தல் |
| 6 | பேருந்து நிலையத்தினுள் அனைவரும் நேரம் அறிய புதிய டிஜிட்டல் கடிகாரம் அமைத்தல் |
| 7 | அண்ணாசிலை அருகில் உயரமான LED லைட் அமைத்தல். |
| 8 | LED Display ஒலி, ஒளி சத்தமில்லா அரசு காணொலி விளம்பரம் செய்ய Display அமைத்தல்.( இடம்: சாம்பவி ஹோட்டல் மேல்புறம்) |
| 9 | பேருந்து வளாகத்தின் உட்புறம் அனைத்து மூலை பகுதிகளிலும் High max light அமைத்தல் எண்ணிக்கை–15 |
| 10 | பேருந்து நிலையத்தினை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க ஏதுவாக தனியார் துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி அவர்களுக்கு மாதாமாதம் ஊதியம் வழங்கி துப்புரவு பணிகள் மேற்கொள்ளுதல் |
| 11 | பேருந்து நிலையம் வெளிப்புறம் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் போதிய வெளிச்சம் இல்லாததால் LED லைட் அமைத்தல். |
| 12 | பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில் RO Water Vending machine அமைத்தல். |
| 13 | பேருந்து நிலையம் மையப்பகுதியில் நீளவாக்கில் செடி மற்றும் மரம் அமைத்து பராமரித்தல். |

மேலே கூறப்பட்ட பணிகளை அனைத்தும் செய்ய ரூ. **80,40,000/–**இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், துப்புரவு பணியாளர்கள் நபர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் **5** ஆண்டுகளுக்கு கணக்கிடப்பட்டு ஊதியத்தொகை ரூ. **39,60,000/–**இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு ஆகமொத்தம் ரூ. **1,20,00,000/–** இலட்சம் மதிப்பீட்டு தொகையில் அடுத்த **5** ஆண்டுகளுக்கு பராமரிக்க சம்மதித்து அதற்கான அனுமதி கோரப்படுள்ளதுடன், பேருந்து நிலையத்தினுள் உள்ள கட்டிடங்களின்மேல் அவர்களது நிறுவனத்தின் விளம்பரத்தினை மட்டும் எந்தவித கட்டணமுமின்றி விளம்பரம் செய்து கொள்ளவும் அனுமதி கோரியுள்ளார்கள். எனவே மேற்படி நிறுவனத்திடம் பேருந்து நிலையத்தினை மேலே விவரிக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டு பராமரிப்பதற்கும், எவ்.வித கட்டணங்களுமின்றி மனுதாரரின் சொந்த நிறுவனத்தின் விளம்பரங்களை பேருந்து நிலையத்தினுள் விளம்பரம் செய்யவும், அனுமதி வழங்குவது குறித்து மன்றத்தின் முடிவிற்கும், அனுமதிக்காகவும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மனுதாரர் மெஸர்ஸ்.ஏ.வி.ஆர்.ஸ்வர்ண மஹால், சேலம் என்கிற நிறுவனம் புதிய பேருந்து நிலையத்தினை பராமரிக்கப்படவுள்ள பணிகளின் அத்தியாவசியத்தினை முன்னிட்டும், பொதுமக்கள் நலன் கருதியும் விளம்பர பலகைகளுக்காக நகராட்சிக்கு **5** ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விளம்பர கட்டணமான ரூ.**12,00,000 /–**ஐ விட மடங்கு கூடுதலான தொகையான ரூ. **1,20,0000/–** இலட்சம் முதலீடு செய்து பேருந்து நிலையத்தினை அழகாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க அனுமதி கோரியுள்ளது நகராட்சிக்கு லாபகரமானதாக உள்ளதாலும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் இசைவினை பெற்று **5** ஆண்டுகளுக்கு மட்டும் பேருந்து நிலையத்தை நகராட்சி பொறியாளரின் கருத்திற்கொப்ப பராமரிக்கவும், மேற்படி நிறுவனத்தின் விளம்பர பலகைகளை நிறுவி விளம்பரம் செய்து கொள்ளவும் மனுதாரருக்கு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1051/2018/எப்1)

**தீர்மான எண் 625 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**2.** ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆத்தூர் கிராமம் பழைய சர்வே எண்.**248/1, 249/3** வார்டு–பி, பிளாக்–**21** நகரளவு எண்.**7/1, 7/4**ல் ஏக்கர் **2.40** செண்ட் பரப்பளவில் அமையும் குடியிருப்புகள், மனைப்பிரிவு அமைக்க திரு.கே.கணேசன் மற்றும் திரு.எஸ்.பரத் என்பவரால் மனைப்பிரிவு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,சேலம் மாவட்டம்அவர்களின்கடித ந.க.எண். SLM/ 2UGTIHHM /6569/ 2023/2022TCP நாள்.**01.02.2023** புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி நிபந்தனைகளுடன் ஒப்புல் செய்து அனுப்பியுள்ளார். அதன்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை பகுதிகளான சாலை வசதி, வடிகால் வசதி, சிறுபாலங்கள், குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகளை நல்லமுறையில் செய்துள்ளார்கள். நகராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்து பணிகள் நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சியால் பராமரிக்க வேண்டி நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டி தானபத்திர பதிவு எண்.**464/2023**, நாள்.**27.01.2023** மற்றும் மின்வாரியத்துறைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை தானபத்திரமாக பத்திரவு பதிவு எண். **465/2023** நாள். **27.01.2023** ல் மனைப்பிரிவு உரிமையாளர் அவர்களால் தானம் பெறப்பட்டு அதன் நகலினை இணைத்துள்ளார்.

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் மாவட்டம் அவர்களால் மா.வ/ந.ஊ.உ.இ (சே.மா) எண்.40/2023 என எண்ணிடப்பட்டு நாள்.01.02.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சியால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதால் நகராட்சியால் மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(கோப்பு எண்.687/2023/எப்1)

**தீர்மான எண் 626 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

3. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிலுவை வரிகளான சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் அனைத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டி தனியார் துறை மூலம் ஆட்டோ விளம்பரம் செய்ய (15 நாட்களுக்கு மட்டும்) ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/–ற்கும், பணி மேற்கொள்ளவும் முன் அனுமதிக்கு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.–

மன்றம் அனுமதிக்கலாம்.செலவினத் தொகையை நகராட்சி பொது நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து செலவழிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 627 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

4. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகன எண் TN 30 Q 3724 திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தி வருகின்றது. வாகனத்தின் டயர்கள் 2018ம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு 75,000 கி.மீ ஓடி உள்ளது. டயர்கள் முழுவதும் பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலையில் இருப்பதால் வாகனத்திற்கு 7.50X16 அளவுள்ள 6 டயர்கள், 6 டியூப் பிளாப் ஆகியவற்றை வாங்குவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட P.G. Tyre Point, MRF Tyre Sales & Service, 5/178A, Salem Main Road, Alagapuram நிறுவனத்தில் வாங்கி கொள்வதற்கும் அதற்குரிய செலவினத் தொகை ரூ. 75,000/– வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 628 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

5. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பிரிவில் பொதுமக்களுக்கு கலை நிகழ்ச்சிகள் விழிப்புணர்வுகள் வழங்க திரு. வெங்கடாஜலபதி நாடக சபாவிற்கு வாய்ப்புகள் வழங்குமாறும் ஆத்தூர் நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்த 15.03.2023 மற்றும் 16.03.2023ம் தேதிகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்திடுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களது கடிதத்தில் (ந.க.எண்–1099/2023/பி1, நாள்–13.03.2023) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சி பகுதியில் என் குப்பை என் பொறுப்பு, மக்கும் குப்பை மக்காத குப்பை, பிளாஸ்டிக் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு, டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் ஆகியவைகள் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் 15.03.2023ம் தேதி புதிய பேருந்து நிலையத்தில் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரையிலும் 16.03.2023ம் தேதி அன்று காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரையிலும் திரு. வெங்கடாஜலபதி நாடக சபா மூலம் நடைபெற்றுள்ளது. மேற்படி, நிகழ்ச்சிக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 7,500/– வீதம் இரண்டு நாட்களுக்கு ரூ. 15,000/– இந்நகராட்சி வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்படி நாடக சபாவிற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

திரு. வெங்கடாஜலபதி நாடக சபாவிற்கு தொகை ரூ. 15,000/– நகராட்சி வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 629 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

6. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் தூய்மை பணியாளர்கள் 6–நபர்கள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தத்தின் மூலம் AR Construction, Gangavalli என்ற நிறுவனம் மூலம் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் மேற்படி நிறுவனம் 2022–23ம் ஆண்டிற்கு தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு விலை விகிதம் நாள் ஒன்றுக்கு ரூ. 429/– ( ரூபாய் நான்னூற்று இருபத்தி ஒன்பது மட்டும்) என மாற்றம் செய்து சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட்டுள்ளதால் அதன்படி AR Construction, Gangavalli நிறுவனம் திருத்திய விலைவிகிதத்தினை அனுமதிக்குமாறு விண்ணப்பம் அளித்துள்ளனர். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

கல்வி நிதியிலிருந்து திருத்திய விலைவிகிதத்தினை ரூ. 429/–ஐ ஏப்ரல்–2023 மாதம் முதல் மற்றும் செப்டம்பர்–2022ம் மாதத்திலிருந்து மார்ச்–2023 மாதம் முடிய வித்தியாச நிலுவை தொகையினையும் AR Construction, Gangavalli என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 630 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

7. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்டவார்டு எண் 25ல் கண்ணாடிமில் அருகில் நியாய விலை கடை அமைத்தல் பணிக்கு கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2022–2023ம் ஆண்டிற்கானதிட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் /மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை சேலம் அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 1146/2022/அ2,நாள் 29.03.2023ல் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண் 631 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

8. நகராட்சிகளில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்துள்ள வாகன ஓட்டுநர்களுக்கு வெகுமதி அளிக்கும் பொருட்டு தங்க பதக்கம் வழங்குவதற்கு ஆத்தூர் நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.கோ. மோகன் என்பவருக்கு (நகராட்சி வாகனத்தின் பதிவு எண்–TN 77 B 5356) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தகுதியான நபர் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தங்க பதக்கம் தயாரிப்பதற்கு ஆகும் அதற்கான செலவினம் சம்மந்தப்பட்ட நகராட்சி மேற்கொள்ளுமாறு மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் செயல்திறன் விலைப்பட்டியலின்படி (Performa Invoice) மேற்படி ஓட்டுநருக்கு தங்க பதக்கம் தயார் செய்வதற்கு ரூ.29,900/– (ரூபாய் இருபத்து ஒன்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை வழங்குவதற்கு அனுமதியும் அதற்குரிய செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 632 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

9. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்டவார்டு எண் 25ல் கண்ணாடிமில் அருகில் நியாய விலை கடை அமைத்தல் பணிக்கு கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2022–2023ம் ஆண்டிற்கானதிட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் /மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை சேலம் அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 1146/2022/அ2,நாள் 29.03.2023ல் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள்18.04.2023ல் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.டி.ரவிச்சந்திரன்ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் | 0.15 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லகண்ணு ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் | 1.57 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு..டி.ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரா் ,ஆத்தூா் என்பவரின் 0.15% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.15 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு..டி.ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரா் ஆத்தூா் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் 633 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

10. ஆத்தூா் நகராட்சிக்குட்பட்ட தேசீய நெடுஞ்சாலை பைபாஸ் பகுதியில் தற்போது நான்கு வழிசாலையின் விரிவாக்கம் செய்யும் பணி நடைப்பெற்று வருகிறது. மேற்படி சாலையில் நகராட்சியால் அமைக்கப்பட்ட உயா் மின் கோபுரவிளக்கு முற்றிலும் அகற்றப்படுகிறது. மேற்படி உயா் மின்கோபுர விளக்கிளை எவ்விதமான சேதாரமும் ஏற்படாமல் மின்கம்பத்தினை மட்டும் மீண்டும் பயன்படுத்தும் வகையில் மேற்படி இடத்திலிருந்து அகற்றி புதிய பேருந்து நிலையம் முன்புறம் அண்ணாசிலை அருகில் அமைக்கவும் அதற்கான சா்வீஸ் பாக்ஸ்,மோட்டாா் காயில் டைமா் ,பில்லா் பவுண்ட் ஒா்க் மின்கம்பம் பொருத்தும் பணி 200 வாட்ஸ் LED மின் விளக்குகள் ஆகிய புதியதாக மாற்றி பொருத்துதல் பணிக்கு நகா்மன்றம் தனது தீா்மானம் எண்.582,நாள் 28.03.2023ல் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்குமின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் 06.04.2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S P&B Enterprises, contractor, Attur | 0.02 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | M/S JB Constructions, contractor, Attur | 0.03 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S P&B Enterprises, contractor என்பவரின் 0.02 % மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S P&B Enterprises, contractor என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் 634 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

11. இந்நகராட்சியில் KNMT 2022–2023 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் **4.60** கி.மீட்டர் நீளம் மண்சாலைகளை தார்சாலையாக மற்றும் பொருட்டு மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மற்றும் தொழில் நுட்ப அனுமதி என நான்கு சிப்பங்களாக இரு பிரதிகள் வீதம் **16** எண்ணிக்கை புத்தக வடிவில் தயார் மழைநீர் வடிகால்களின் தற்போதைய நிலை குறித்து இதில் சாலைகள் புகைப்படங்கள் Site plan Cadd வரைப் படங்கள் மற்றும் மதீப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ஆகியோர்களுக்கு அனுப்பியதற்கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை விரைந்து செய்ய வேண்டியதால் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண் **15**ன் கீழ் மேற்படி பணிகளை செய்தமைக்கு ஆன செலவினத் தொகை ரூ.**24,700/**-ஐ மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்,

**தீர்மான எண் 635 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

12. ஆத்தூர்நகராட்சிக்கு சொந்தமான வீரகனூர் சாலையில் இயங்கி வரும் MCC மையத்தில் RO Plant இயந்திரம் புதியதாக வாங்கி பொருத்துதல் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்**18**ல் பாரதியார் தெருவிலுள்ள பழுதடைந்த பொதுகழிப்பிடத்தை பழுது நீக்கம் செய்து நடப்பாண்டில் SBM 2.0 திட்டம் செயல்படுத்தும் வகையில் ODF சான்று பெற வேண்டியதன் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை விரைந்து செய்ய வேண்டியதன் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண் **15**ன் கீழ் மேற்படி பணிகளை செய்தமைக்கு ஆன செலவினத் தொகை ரூ.**2,56,000/**-ஐ மேற் கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்,

**தீர்மான எண் 636 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

13. ஆத்தூர்நகராட்சியில் தமிழக அரசால் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விபரங்களை அவ்வப்போது பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பர பேணர்கள் பாது காப்பான முறையில் இரும்பு பைப்புகள் சதுர MS பைப்புகள் மூலம் செல்டிங்செய்து அவ்வப் போது கழற்றி மாற்றி பொருத்துவதற்கு ஏற்றவாறு போல் நட் அமைத்து நிரந்தரமாக பேணர் கட்அவுட் செய்து பேணர் பிரிண்ட் செய்து பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் பொருத்த மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டதன் படியும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களால் பணி முன்னேற்ற ஆய்வுட்டத்தில் நேரில் அறிவுறுத்திய தன் பேரிலும் இப்பணியினை விரைந்து செய்ய வேண்டியதன் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண் **15**ன்கீழ் மேற்படி பணிகளை செய்தமைக்கு ஆன செலவினத் தொகை ரூ.**50,000/**-ஐ மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்,

**தீர்மான எண் 637 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**14.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஈர்ப்பு வாகனம் TN 27.B.5356 பழுது ஏற்பட்டுள்ளதால் நகராட்சி பொறியாளரால் நடைபெற்றுவரும் அரசின் திட்ட பணிகளை தல ஆய்வு மற்றும் குடிநீர் விநியோகம் சம்மந்தமான அத்தியாவசிய பணிகளை கண்காணிக்க இயல வில்லை எனவே தொடர்ந்து வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் விரைந்து பழுது நீக்கம் செய்வதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண் **15**ன்கீழ் மேற்படி பழுதடைந்த ஈர்ப்பு வாகனத்தை பயன்படுத்துவதற்கு ஏதுவாக பழுது நீக்கம் செய்தமைக்கு ஆன செலவினத் தொகை ரூ.**24950/-**ஐ மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் 638 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**15.** இந்நகராட்சியில் நடைபெற்ற திட்ட பணிகளை தீபாவளி மலரில் ஒரு நாள் மட்டும் பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்தற்கான விளம்பர செலவினத் தொகை ரூ.**9,900/-**ஐ விளம்பர செய்த நிறுவனமான மாலை மலர் என்ற நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 639 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**16.** இந்நகராட்சிக்கு புதியதாக **10** எண்ணிக்கை LCV வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை Times Nation என்ற ஆங்கில நாழிதழ் மற்றும் தினசெய்தி என்ற தமிழ் நாளிதழ் ஆகிய தினசரி நாழிதழ்களில் ஒரு நாள்மட்டும் விளம்பரம் செய்தற்கான செலவினத் தொகை ரூ.**49,665/-**ஐ விளம்பர செய்த நிறுவனமான Uipras adz என்ற நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1386/2023/இ1)

**தீர்மான எண் 640 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**17.** ஆத்தூர் நகர பகுதிகளில் செல்லும் வசிஷ்டா நதி அமைந்துள்ளது. மேற்படி வசிஷ்டா நதி யில் நகராட்சிக்குட்பட்ட கழிவு நீர் **33** இடங்களில் ஆற்றில் கலந்து ஆற்றுநீர் மாசு படுவதாக தேசிய பசுமை தீர்பாயத்தில் நீதி மன்ற வழக்கு உள்ளதால் ,மேற்படி கழிவு நீர் கலப்பதை தவிர்க்கும் பொருட்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் ஆகியோர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தனியார் தொழில் நுட்ப ஆலோசகர் மூலம் விரிவான திட்டக்கருத்துரு மற்றும் மதிப்பீடு தயார் செய்ய மன்றத்தின் ஒப்புதல் கோரப் படுகிறது. இதற்கான தோராய மதிப்பீடுத்தொகை ரூ.**9.60** இலட்சத்திற்கு மேற்கொள்ளமன்றத்தின் ஒப்புதல் கோரப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 641 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**18.** ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி மற்றும் யூனியன் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும்குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்திட ஒருகிணைந்த சமையற்கூடம் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 17404/2022/எம்–1, நாள்10.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி சமையல் கூடம் கட்டிடம் முழுமையாக முடித்து 15.05.2023ல் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.மேலும் மேற்படி பணியினை விரைந்து செயல்படுத்த உள்ளதால் புதியதாக கட்டிடம் கட்ட இயலாத நிலை உள்ளது. எனவே பணியின் அவசரஅவசியம் கருதி மேற்படி முல்லைவாடி பள்ளி வளாகத்திலுள்ள பழைய பள்ளி அறைகளை பயன்படுத்தி புதுப்பித்தல் மற்றும் மராமத்து செய்து காலை சிற்றுண்டி வழங்குவதற்கு சமையல் கூடம் அமைக்க தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடுத் தொகை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர் மன்ற தீர்மானம் எண்618, நாள் 28.03.2023ல் அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு06.04.2023ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைமுடிவு செய்யமன்றத்தின் ஒப்புதலுக்குவைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S.V.S.அசோசியேட்ஸ்,<br>ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 6.28% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/S.ஸ்ரீதேவி.கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்,<br>ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 6.13%மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறுபெறப்பட்டஇரண்டுஒப்பந்தப்புள்ளிகளில்M/S.ஸ்ரீதேவி.கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், என்பவர் மதிப்பீட்டைவிட 6.13% கூடுதாக கொடுத்துள்ளதால் விலை குறைப்பு செய்து தரகோரி ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர், தனது விலை குறைப்பு கடிதத்தில் 6.14% குறைத்து மதிப்பீட்டை விட 0.01% குறைந்த விலைக்கு பணி செய்து தர தனது சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளார் இது குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. இப்பணிக்கு பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.ஸ்ரீதேவி.கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், என்பவர் மதிப்பீட்டை விட 6.13% கூடுதாக கொடுத்துள்ளதால் விலை குறைப்பு செய்து தரகோரியதில் ஒப்பந்ததாரர், தனது விலை குறைப்பு கடிதத்தில் 6.14% குறைத்து மதிப்பீட்டை விட 0.01% குறைந்த விலைக்கு பணி செய்து தர தனது சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளார் எனவே M/S.ஸ்ரீதேவி. கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிதையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் 642 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**19.** ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கோட்டை வசிஷ்ட நதியின் குறுக்கே நெடுஞ்சாலை துறையினால் புதியதாக உயர் மட்டப்பாலம் அமைக்கப்பட்டுவரும் நிலையில் மேற்படி பாலத்தின் மேல் பகுதியில் இருபுறமும் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க கோரி கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை துறை திட்டங்கள் சேலம் அவர்களின் கடிதம் எண்DD/ வசிஷ்டாநதி/ **2023**/ அ**1**, நாள்.**30.01.2023**ல் ரூ,**18.00** இலட்சம் ஆத்தூர் நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு புதியதாக அமைக்கப்பட்டு வரும் வசிஷ்ட நதியின் உயர்மட்டப் பாலத்தின் இரு புறமும் ரூ,**18.00** இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு நகர் மன்ற தீர்மானம் எண்**526**, நாள் **28.02.2023**ல் அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு**06.04.2023**ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைமுடிவு செய்யமன்றத்தின் ஒப்புதலுக்குவைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| **1** | M.S. MDS Power System,<br>82/48 Thirunavukarasu Nagar,Salem. | **0.01**% மதிப்பீட்டை விட குறைவு |
| **2** | திரு.ஆர்.செல்லக்கண்ணு<br>ஒப்பந்ததாரர்.ஆத்தூர். | **3.91**%மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M.S. MDS Power System, 82/48 Thirunavukarasu Nagar , Salem. என்பவரின் **0.01**% மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.01**% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M.S. MDS Power System, 82/48 Thirunavukarasu Nagar , Salem என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் 643 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**20.** ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு அலுவலக பயன்பாட்டிற்காக பொறியியல் பிரிவு இளநிலைப்பொறியாளர் இருக்கைக்கு HP Mono Laser Jet Printer -2 ,Eëon MEP L 3250 Inkjet Color Printer -1, மற்றும் வருவாய்பிரிவு வசூல் மையத்திற்கு TVS Dot Matrix Printer -**3** அனைத்துபிரிவிற்கு Epëon M200All in One Inkjet Printer -4,CCTV HD Disk 2TB SATA Type **1** மற்றும் MultiMadia USB keyboard &Mouse-10 புதியதாக வாங்குவதற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள(GEM Rate) ல் விலை விகிதத்தில் M/S Spyder Technology சேலம் என்ற நிறுவனத்தார் மேற்காணும் அனைத்தும் கொள்முதல் செய்ய சம்மத கடிதம் அளித்துள்ளார்**10**இதற்கு ஆகும் செலவினம் ரூ.**2,82,491**/-ஆகும் எனவே M/S Spyder Technology சேலம் என்பவருக்கு சப்ளை உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

**1.**மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** Spyder Technology சேலம் என்ற நிறுவனத்தார் மேற்காணும் அனைத்தும் கொள்முதல் செய்ய சம்மத கடிதம் அளித்துள்ளார் எனவே M/S Spyder Technology சேலம் என்பவருக்கு சப்ளை உத்திரவு வழங்கவும் மன்றும் ஏற்கலாம்.

**தீர்மான எண் 644நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

21. ஆத்தூர் நகராட்சிக்கு 15–வது மத்திய நிதிக்குழு 2022–2023–ம் நிதியாண்டில் Tied Grant–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான LCV வாகனங்கள்10 எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.73.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்1600/2022/CFC1, நாள்21.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் 645 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

22. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்8ல் கோட்டை பெருமாள் கோவில் தெரு மெயின் சாலை மற்றும் குறுக்கு தெருக்களில் சிமெண்ட் சாலைகளில் பைப் லைன் நீடிப்பு செய்யப்பட்ட சாலையினை தோண்டப்பட்ட பகுதிகள் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் மிகவும் இடையூறாக உள்ளதாலும் மேலும் முனியப்பன் கோவில் தேர் திருவிழா விரைவில் நடைபெற உள்ளதாலும் மேற்படி சாலையின் வழியாக தான் தேர் செல்ல உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி சாலைகளிலுள்ள பழுதடைந்த பகுதிகளை சிமெண்ட் கலவை கொண்டு பேஜ் பணி செய்துர கோரி வார்டு நகர் மன்ற உறுப்பினர் தனது கடிதத்தில் கோரியுள்ளார். அதன்படி மேற்படி பைப் லைன் அமைக்க சாலையினை தோண்டப் பட்ட பகுதிகளை சிமெண்ட் கலவை கொண்டு பேஜ் பணி செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடுத்தொகை ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்,செலவினத்தை வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம். **தீர்மான எண் 646 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

23. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள அனைத்து வார்டு பகுதியில் உள்ள வீடுகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை சேகரிக்கப்படும் நுண்உரம் செயலாக்க மையத்தில் அரைக்கும் இயந்திரத்தில் உள்ள பழுதுகள் நிவர்த்தி செய்தல் பணிக்கு செலவினம் ரூ.75000/–ஙககு இந்நகர்மன்ற தீர்மான எண் 539 நாள் 28.02.2023ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளளற்கிணங்க 12.04.2023ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருவாளர். சன்பிரைட் டூள்ஸ் 79/13 மூகப்பர் ரோடு மண்ணூர் பேட்டை சென்னை | நுண்உரம் செயலாக்க மையத்தில் அரைக்கும் இயந்திரத்தில் உள்ள பழுதுகள் நிவர்த்தி செய்தல் பணி | ரூ.72450/– ( ரூபாய் எழுபத்தி இரண்டாயிரத்தி நானூற்றி ஐம்பது மட்டும் ) |
| 2 | திருவாளர். சன் டெக் 79/10 மூகப்பேர் சாலை மண்ணூர் பேட்டை சென்னை | நுண்உரம் செயலாக்க மையத்தில் அரைக்கும் இயந்திரத்தில் உள்ள பழுதுகள் நிவர்த்தி செய்தல் பணி | ரூ.81300/– ( ரூபாய் எம்பத்தி ஓராயிரத்தி மூன்னூறு மட்டும் ) |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வேண்டி மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். சன்பிரைட் டூள்ஸ்79/13 மூகப்பர் ரோடு மண்ணூர் பேட்டை சென்னை ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். **தீர்மான எண் 647 நாள் 28.04.2023 தீர்மானம் – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

24. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசுஒழிப்பு பணிக்கு கிருமி நாசினி ( டெம்பாஸ் மற்றும் பைரத்திரியம் ) விநியோகம் செய்தல் செலவினம் ரூ. 2,05,000/–க்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 540 நாள் 28.02.2023ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளளற்கிணங்க 12.04.2023ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருவாளர். சன்பிரைட் டூள்ஸ் 79/13 மூகப்பர் ரோடு மண்ணூர் பேட்டை சென்னை | டெம்பாஸ் லிட்டர் ஒன்றின் விலை | ரூ.625/– ( ரூபாய் ஆறுநூற்றி இருபத்தைந்து மட்டும் ) |
| | | பைரத்திரியம் லிட்டர் ஒன்றின் விலை | ரூ. 1100/– ( ரூபாய் ஆயிரத்தி நூறு மட்டும் ) |
| 2 | திருவாளர். சன் டெக் 79/10 மூகப்பேர் சாலை மண்ணூர் பேட்டை சென்னை | டெம்பாஸ் லிட்டர் ஒன்றின் விலை | ரூ. 700/– ( ரூபாய் ஏழுநூறு மட்டும் ) |
| | | பைரத்திரியம் லிட்டர் ஒன்றின் விலை | ரூ. 1250/– ( ரூபாய் ஆயிரத்தி இருநூற்றி ஐம்பது மட்டும் ) |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வேண்டி மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். சன்பிரைட் டூள்ஸ், 79/13, மூகப்பர் ரோடு, மண்ணூர் பேட்டை, சென்னை ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 6480 நாள் 28.04.2023 தீர்மானம்– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஓம்) . திருமதி.ம.நிர்மலாபபிதா
தலைவர்
ஆத்தூர் நகராட்சி.

// உண்மை நகல்//

ஆணையாளர்
ஆத்தூர் நகராட்சி

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வார்டு எண் 1 முதல் வார்டு எண் 33 வரையுள்ள பகுதிகளில் வெளிக்கொணர்வு பணியாளர்களை கொண்டு வீடு வீடாக குப்பைகளை சேகரம் செய்து குறிப்பிட்ட நுண் உரம் செயலாக்கம் தயாரிக்கும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் 81 வெளிகொணர்வு பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் பணி மேற்கொள்ளவும் அலுவலக உத்தரவு ந.க.எண்–3983/2018/எச்1, நாள்–03.03.2023 இன்படி RELYON FACILITY PVT LTD, Chennai நிறுவனத்திற்கு வழங்கிய பணி உத்தரவு 06.05.2023 ஆம் தேதியில் முடிவடைகிறது. புதியதாக திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் மற்றும் அதில் புதியதாக பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு தற்காலிக நியமனம் செய்து கொள்ள ந.நி.இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து உத்தரவு வரப்பெற்றுள்ளது (ந.க.எண்–34638/2022/EA2-SWM-1, நாள்–10.01.2023) அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் செய்முறை நடைபெற்று வரும் நிலையில் Tender Process ஏற்கனவே பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்கள் வெளிக்கொணர்வு அடிப்படையில் 81 பணியாளர்களை ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் நுண் உரம் செயலாக்க பணியினை இரண்டு மாத காலத்திற்கு மேற்கொள்ளவும் (07.05.2023 முதல் 07.07.2023) உத்தேச செலவின தொகை ரூ.25/– இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட நிறுவனம் RELYON FACILITY PVT LTD பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.